# பன்னிரண்டாம் வகுப்பு பொருளியல்
# முழு ஆண்டு தேர்வு-2024
# வினா விடைகள்.

பகுதி அ

I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும். 20 X 1 = 20.

| வினா எண் | விடைகள் | வினா எண் | விடைகள் |
|---|---|---|---|
| | A TYPE | | |
| 1 | ஆ 1. | 11 | ஆ–1950 |
| 2 | ஆ–விற்பனை வரி | 12 | ஆ–ஒலி |
| 3 | அ– இயங்கும் சமுதாயம் | 13 | ஈ–ஜே எம் கீன்ஸ் |
| 4 | ஆ– முதலாளித்துவ பொருளாதாரம் | 14 | ஈ– அயல்நாட்டு செலாவணி சந்தை |
| 5 | ஈ–நேர் கனிய | 15 | இ–வருமானம் |
| 6 | ஈ–அணு ஆற்றல் | 16 | ஈ–ரேக்னர் பிரிஸ்க் |
| 7 | ஆ– பணவியல் | 17 | ஆ–தாள் தங்கம் |
| 8 | ஆ –விலைகள் அதிகரிப்பு | 18 | ஆ–கட்டுப்படுத்தும் திட்டம் |
| 9 | ஆ–C/Y | 19 | இ–வட்டி வீதத்தின் |
| 10 | இ–வடகொரியா | 20 | அ–1911 |
| | B TYPE | | |
| 1 | இ–வட்டி வீதத்தின் | 11 | அ– இயங்கும் சமுதாயம் |
| 2 | ஆ–ஒலி | 12 | ஆ 1. |
| 3 | ஈ–அணு ஆற்றல் | 13 | ஆ–தாள் தங்கம் |
| 4 | ஈ–நேர் கனிய | 14 | ஆ–C/Y |
| 5 | ஈ–ஜே எம் கீன்ஸ் | 15 | ஈ–ரேக்னர் பிரிஸ்க் |
| 6 | ஆ –விலைகள் அதிகரிப்பு | 16 | இ–வடகொரியா |
| 7 | இ–வருமானம் | 17 | ஆ– முதலாளித்துவ பொருளாதாரம் |
| 8 | ஆ–1950 | 18 | ஈ– அயல்நாட்டு செலாவணி சந்தை |
| 9 | ஆ– பணவியல் | 19 | ஆ–கட்டுப்படுத்தும் திட்டம் |
| 10 | அ–1911 | 20 | ஆ–விற்பனை வரி |

பகுதி ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை அளிக்கவும்
வினா எண் 30 கட்டாயம் விடை அளிக்கவும் . 7 x 2 = 14

| வினா எண் | விடைகள் | மதிப் பெண்கள் |
|---|---|---|

*V.G.P CHANDRAN SIVAKASI VNRDt*



www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 21 | **முதலா ளித்துவம் என்றா ல் என்ன?**<br>1. சந்தைப் பொருளாதாரம் 2. அரசாங்கத்தின் பங்கு குறைவு. 3. உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். 4. இலாப நோக்கம் | 2 |
| 22 | **நெகிழிப் பணம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.**<br>நெகிழிப் பணம் , காகிதப் பணத்திற்கு மாற்றாக உள்ளது. இது நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருக்கும். எ.கா. ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, வணிக நிறுவன அட்டை, அந்நிய செலாவணி அட்டை, மற்றும் சூட்டிகை அட்டை. | 2 |
| 23 | **முழு வேலை வாய்ப்பு- வரையறுக்கவும்**<br>நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள் மற்றும், நிலவுகின்ற கூலி விகிதத் தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக் கிறதெனில் அதனை முழு வேலை வாய்ப்பு என்கிறோம் . | 2 |
| 24 | **தேசிய வருவாய் கணக்கீட்டில் சொந்த நுகர்வு எவ்வாறு சிக்கலை தருகிறது?**<br>**விவசாயிகள் தங்களின் சுயநுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது** | 2 |
| 25 | **உடன்பாடில்லா வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக .**<br>உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் உடன்பாடில்லா வேலையின்மை ஏற்படுகிறது.<br>வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர் . | 2 |
| 26 | **வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகளை குறிப்பிடுக.**<br>1. திறமை பெற்ற அலுவலரை நியமித்து விவசாய கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.<br>2..இதர வங்கி நடவடிக்கைளில். சிறப்பு வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.<br>3. ஊரகத் துறைக்கு தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக விவசாயக்கடன் வழங்குவது மேலும் அவைகளை ஒருங்கிணைப்பது ஆகியவையாகும். | 2 |
| 27 | **தடை யற்ற வாணிகப் பகுதி என்றா ல் என்ன?**<br>ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக் கருதி | 2 |

| | | |
|---|---|---|
| | வாணிகத் தடைகளை குறைக்க ஒத்துழைக்கும். இரண்டு அல்லது **அதற் கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போட ப்படுகிறது** | |
| 28 | **விதைப்ப ந்து என்பதன் பொ ருள் கூறுக.** ஒரு விதை மண்ணால் மூடிவைக்கப்படுகிறது. அந்த மண் உரம் கலந்த களிமண்ணாகும்.பிறகு உலர்த்தப்படுகிறது. பின்பு எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைக்கலாம். | 2 |
| 29 | **பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம் குறிப்பு வரைக.** இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாக கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும். இந்திய அரசு 1987-88 இல் இத்திட்டத்தை தாக்கல் செய்தது. | 2 |
| 30 | **GST– யின் உள்ளடக்கங்கள் யாவை** GST யின் கூறுகள் 1. CGST, 2. SGST, 3. IGST, | 2 |

## பகுதி –இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை அளிக்கவும் . வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும் .** 7 x 3 = 21

| வினா எண் | விடைகள் | மதிப் பெண் கள் |
|---|---|---|
| 31 | **தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ளவித்தியாசம் என்ன?** தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முக விரிகளைக் கழித்த பின்பு கிடைப்பது செலவிடக்கூடிய வருமானமாகும். இது தனிநபர் நுகர்விற்காக் செலவிடக்கூடிய பண அளவு ஆகும். | 3 |
| 32 | **கீன்ஸின் கோட்பாட்டை விளக்குக** வேலை வாய்ப்பு வருமானமும் பற்றிய கீன்ஸின் கோட்பாடு இவரது கோட்பாட்டில் விளைவு தேவை மிக முக்கிய பங்காற்றுகிறது. விளைவு தேவையானது ஒட்டுமொத்த அளிப்பையும் ஒட்டுமொத்த தேவையும் சார்ந்தது ஒட்டுமொத்த தேவை நுகர்வு சார்பு பணி மற்றும் முதலீட்டு சார்பு பணியைச் சார்ந்தது. நுகர்வு வருமான அளவு மற்றும் MPC யைச் சார்ந்தது மூலதனமானது MEC மற்றும் வட்டி வீதத்தைச் சார்ந்தது | 3 |

<table>
<tr><td>33</td><td>நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.<br><table><tr><td>நேர்முக வரி என்பது ஒரு நபரின் வருமானம் மற்றும் செல்வத்தின் மீது விதிக்கப் பட்டு நேரடியாக அரசுக்கு செலுத்துவதாகும்.</td><td>மறை முகவரி என்பது ஒருவர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்பக் கப்பட்டு மறை முகமாக அரசுக்கு செலுத்துவதாகும்</td></tr><tr><td>வளர்வீதம்</td><td>தேய்வீதம்</td></tr><tr><td>ஒரே நபர் மீது விழுகிறது</td><td>பல்வேறு நபர்கள் மீது விழுகிறது.</td></tr></table></td><td>3</td></tr>
<tr><td>34</td><td>வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக<br>1. விற்பனையை விரிவுப்படுத்துதல்<br>2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்<br>3. வாணிக பரவலாக்கம்<br>4. போட்டி இடர்களை குறைத்தல்.</td><td>3</td></tr>
<tr><td>35</td><td>இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக.<br>தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் E –கழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணுக் கழிவுகள் ஏற்படுகின்றன . மின்னனுச் சாதன பொருட்களை கழிக்கும் போதோ அல்லது மறுசுழற்சி செய்யும்போதோ E கழிவுகள் தோன்றும்.உதாரணமாக குளிர்சா தனப் பெட்டிகள், காற்றுச் சீரமைப்பிகள், கைபேசிகள்,கணினிகள்.</td><td>3</td></tr>
<tr><td>36</td><td>சார்க்–கின் பணிகளை சுருக்கமாக கூறுக.<br><u>சார்க் அமைப்பின் பணிகள்</u><br>1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப் பைபராமரித்தல்<br>2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்<br>3. உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்<br>4. வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது<br>5. பயங்கர வாத செயல்களைத டுப்பது.</td><td>3</td></tr>
<tr><td>37</td><td>நிதி ஆயோக்கின் பணிகள் யாவை ?<br>1. கூட்டுறவு மற்றும் கூட்டாட்சி<br>2. நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களைப் பங்கெடுக்கச் செய்தல்.<br>3. பரவலாக்கப்பட்ட திட்டமிடல். 4. தொலைநோக்குத் திட்டமிடல்<br>5. சச்சரவை தீர்த்தல் 6. நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்.</td><td>3</td></tr>
<tr><td>38</td><td>வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.<br>1. வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தப்படக்கூடிய ஒன்றாகும்.<br>2. ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தைஉள்ளடக்கியது.<br>3. வரியானது சட்டத்தை மீறியதற்காக சுமத்தப்படும் தண்டத் தொகை போன்று விதிக்கப்படுவதல்ல.</td><td>3</td></tr>
<tr><td>39</td><td>பல்வகையானஉடன் தொடர்புகளை கூறி விளக்குக.<br>1. மாறிகளுக்கு இடையேயான உறவின் திசையின் அடிப்டையில் வகைப்பாடு</td><td>3</td></tr>
</table>

*V.G.P CHANDRAN SIVAKASI VNRDt*

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | **2.** பகுப்பாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் மாறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்பாடு.<br>3. மாறிகள் மாறும் விகிதத்தின் அடிப்படை யில் வகை ப்பா டு | |
| **40** | **மின்னணு வங்கி முறை பற்றி எழுதுக**<br>மின்னணு வங்கியானது நிகழ்நிலைவங்கி முறை(Online Banking) அல்லது இணைய வங்கி முறை(Internet Banking) எனவும் அழைக்கப்படுகிறது. இம்முறையில் ஒரு வங்கி அல்லது நிதிநிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் தஙகளது பல்வேறு நிதிப்பரிமாற்றங்களை அவ்வங்கி அல்லது நிறுவனத்திற்கு நேரில் செல்லாமல் அவற்றின் இணையதளத்திலேயே நிகழ்த்துவது ஆகும். | **3** |

## பகுதி -ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.**
**7 x 5 = 35.**

| வினா எண் | விடைகள் | மதிப் பெண்கள் |
|---|---|---|
| **41அ** | | **5** |

தீர்வு உறுப்பு மதிப்புகளை நேரிடையாகப் பயன்படுத்தும் முறை

| விலை (X) | அளிப்பு (Y) | XY | $X^2$ | $Y^2$ |
|---|---|---|---|---|
| 10 | 40 | 400 | 100 | 1600 |
| 12 | 41 | 492 | 144 | 1681 |
| 14 | 48 | 672 | 196 | 2304 |
| 15 | 60 | 900 | 225 | 3600 |
| 19 | 50 | 950 | 361 | 2500 |
| $\sum x = 70$ | $\sum y = 239$ | $\sum xy = 3414$ | $\sum x^2 = 1026$ | $\sum y^2=11685$ |

$$r = \frac{N\Sigma XY - (\Sigma X)(\Sigma Y)}{\sqrt{N\Sigma X^2 - (\Sigma X)^2}\sqrt{N\Sigma Y^2 - (\Sigma Y)^2}} \qquad r = \frac{(5 \text{ x } 3414) - (70 \text{ x } 239)}{\sqrt{(5 \text{ x } 1026) - (70)^2}\sqrt{5\text{x}11685 - (239)^2}}$$

$$r = \frac{17,070 - 16,730}{\sqrt{230 \text{ x}\sqrt{1304}}} \qquad r = \frac{340}{547.65} = +0.621$$

மேற்கண்ட எடுத்துக்காட்டில் உடன்தொடர்புக் கெழுவின் அளவு 0.0621 என்றிருக்கிறது. ஆகவே, பொருளின் விலைக்கும், அளிப்பிற்கும் நேரடி உறவும் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உறுதியான உறவும் உள்ளது.

| | | |
|---|---|---|
| **41 ஆ** | **நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்**<br>ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தேசிய வருவாய் மிக முக்கிய பங்கு வகிக்கிறது . தேசிய வருவாய் பொருளாதாரத்தின் “சமூகக் கணக்கு” எனச் சொல்லப்படுகிறது<br>**முக்கியத்துவம்**<br>1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது. | **5** |


*V.G.P CHANDRAN SIVAKASI VNRDt*

| | | |
|---|---|---|
| | 2. பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்கவும், தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.<br>3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.<br>4. தலா வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார நலனை அறிய<br>பயன்படுகிறது.<br>5. காரணிகளின் வருமானப் பகிர்வை தெரிந்து கொள்ள தேசிய வருவாய்<br>பயன்படுகிறது.<br>6. ஒரு நாட்டின் வருமானத்தை மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், தேசிய வருவாய் விவரங்கள் பயன்படுகின்றன | |
| **42அ** | **இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.**<br>இந்தியாவின் மையவங்கி இந்திய ரிசர்வ் வங்கி ஆகும்.மைய வங்கிகளின் பணிகள்பின்வருமாறு<br>*1. பணஅதிகார அமைப்பு.*<br>இது நாட்டின் பண அளிப்பைக் கட்டுப்படுத்தி பணவீக்கத்தை குறைக்கிறது மற்றும் வங்கிஅமைப்பை நிலைப்படுத்துகிறது.<br><br>*2. காகிதப் பண வெளியீடு.*<br>இது காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனமாகும். மேலும் பணம் மற்றும் கடன் அளவுகளை மேலாண்மை செய்கிறது.<br>*3. வங்கி உரிமங்கள் வழங்குகிறது.*<br>வணிக வங்கிகள் வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும்.<br>*4. அரசின் வங்கி.*<br>இது மத்திய, மாநில அரசுகளுக்கான வங்கியாகும். அரசின் நிதி தொடர்பான அனைத்துப் பணிகளையும் செய்கிறது.<br>*5. வங்ககளின் வங்கி*<br>மைய வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கி ஆகும். வங்கிகளுக்கு கடன் வழங்குகிறது. மேலும் அவைகளின் வைப்புகளையு ஏற்கிறது.<br>*6. கடன் வழங்குவதில் கடைசி புகழிடம்*<br>வணிக வங்கிகளுக்கு தீர்க்க முடியாத நிதிச்சிக்கல்கள் ஏற்படும் பொழுது, மைய வங்கி ஈட்டுக் கடனை வழங்கி உதவுகிறது.<br>*7. அந்நிய செலாவணி பாதுகாவலன்*<br>மைய வங்கி வெளிநாட்டு பண இருப்புக்களை பாதுகாக்கும் பணியினை செய்கிறது. மேலும் சட்டப்படியான மேலாண்மையும் செய்கின்றது.<br>*8. பொருளாதாரத்தி நெறிப்படுத்துகிறது.* | 5 |

*V.G.P CHANDRAN SIVAKASI VNRDt*

பணவியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நாட்டு வருமானம், செலவு, வேலைவாய்ப்பு, முதலீடு, சேமிப்பு ஆகியவற்றை தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

**42 ஆ** **வறுமையின் நச்சு சுழற்சியினை வரைபடத்துடன் விளக்குக.** **5**




1.. அளிப்பின் பக்கத்தில், :- குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது. இது மூலதன பற்றாக்குறையை உருவாக்குகிறது. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து வருமானமும் குறை கிறது


2. தேவைப் பக்கத்தில்:- குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறை வாக இருக்கும்.இது முதலீட்டைக் குறை க்கச் செ ய்யும், இதனால் மூலதன பற்றாக் குறை ஏற்பட்டு உற்பத்தி குறை ந்து வருமானத்தை குறைக் கும்..

**43அ** **ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.** **5**

கீன்ஸின்வேலை வாய்ப்பு கோட்பாட்டில், ADF மற்றும் ASF சமநிலையை விளக்க, குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன. மேலும்நுகர்வுச் சார்பு நேர்கோடு ஆகவும், முதலீடு தன்னிச்சையானது (Autonomous) எனவும் கீன்ஸின் கோட்பாடு அனுமானிக்கிறது.

வரைபடத்தில்




1. தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு 'E' என்ற புள்ளியில் சம நிலை அடைகிறது.
2. E' என்ற புள்ளியில் வேலை வாய்ப்பு $N_0$ ஆக இருக்கும்.
3. $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகுத் தேவை அதிகமாக இருக்கும் ஆனால் தொகு அளிப்பு குறைவாக இருக்கும் இந்த இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.
4. சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்த பிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர்.

| | | |
|---|---|---|
| | 5. ஏனெனில் $N_0$ நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகுத்தேவை, தொகு அளிப்பைவிட குறைவாக இருக்கும்<br>6. உற்பத்தி சம நிலையை தீர்மானிப்பத்தில் , தொகு தேவை கருத்து<br>அதிக முக்கியத்துவம் வகிக்கிறது.<br>7. வரைபடத் தில் $N_0$ மற்றும் $N_f$ க்கும் இடையே உள்ள வித்தியாசம்<br>வேலையின்மையை காட்டுகிறது | |
| 43 ஆ | **இந்திய சமூக பொ ருளாதார மேம்பாட் டில் டபிள்யூ.டி.ஓ – ன் பங்கினை விவாதிக்க.**<br>1. 1995ஆம் ஆண்டில் GATT ஆனது உலக வர்த்தக அமைப்பு என உருவானது.<br>2. இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் உதிரி பாகங்கள் மற்றும் இயந்திரங்கள் குறைவான விலையில் கிடைத்துள்ளது.<br>3. குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.<br>4. பன்னாட்டு பரிவர்த்தனை தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.<br>5. விரிவு படுத்தப்பட்ட சந்தை தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர்<br>6. நாடுகளிடையே ஒப்பந்தம் போடாமல் பல நாடுகளில் இந்தியா பொருட்களை விற்பனை செய்ய முடிகிறது | 5 |
| 44அ | **சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.**<br>1. சந்தை விதி அதிக உற்பத்திக்கு வாப்பு இல்லை என்கிறது. ஆனால் கீன்சு கூற்றுப்படி அதிக உற்பத்திக்கு வாப்பு இருக்கிறது.<br>2. கீன்சு கூற்றுப்படி அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அள்விற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இவ் விதி செயல்படாது.<br>3. பொருளாதாரத்தில் தானாக சரிசெய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது<br>4. பணம் நடுநிலையாக இருக்காது.<br>5. முழு வேலைவாய்ப்பிற்கு சாத்தியம்மில்லை என்று கீன்சு குறிப்பிடுகிறார்.<br>6. அரசின் தலையீடு அவசியம் என்று கீன்சு குறிப்பிடுகிறார். | 5 |


**44 ஆ** **அயல்நாட்டு செலுத்து சமநிலையின் கூறுகளை விளக்குக** **5**

வரவு மற்றும் பற்று இனங்கள் நேர்க்கிடையாக அயல்நாட்டுச் செலுத்துநிலை அறிக்கையில் பதியப்படுகிறது. அவை கீழ்கண்டமூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகிறது

| நடப்புக் கணக்கு. | மூலதன கணக்கு | மைய வங்கி நிதி சொத்து கையிருப்புக் கணக்கு. |
|---|---|---|
| பன்னாட்டு பண்ட மற்றும் பணி பரிவர்த்தனைகள், உற்பத்திக் காரணி வருவாய் ஆகியவை இக்கணக்கின் கீழ் பதியப்படுகிறது. | வெளிநாட்டுக் கடன், அந்நிய முதலீடு பன்னாட்டு பணம் மற்றும் நிதி சந்தை பரிவர்த்தனைகள் ஆகியவை இக்கணக்கின் கீழ் பதியப்படுகிறது. | மைய வங்கியின் கையிருப்பில் உள்ள செலாவணி சொத்துக்களில் நடைபெறும் பரிவர்த்தனை இக்கணக்கின் கீழ் பதியப் படுகிறது. |
| உபரி | உபரி | கையிருப்பு கணக்கில் சேர்க்கப்படும். |
| பற்றுக்குறை | பற்றுக்குறை | கையிருப்பிலிருந்து எடுத்து செலவிடப்படும் |

**45அ** **வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.** **5**

**வாணிபச் சுழற்ச்சியின் கட்டங்கள்.**




**i) பூரிப்பு,**

வளர்ச்சிக் கட்டத்தின் உச்சத்தில் பூரிப்புநிலை தோன்றும். பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

**ii) பின்னிறக்கம்,**

பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடடிவக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்கு குறைக்க ஆரம்பிப்பார்கள். தொடர்ந்து உற்பத்தி, வருமானம் ஆகியன குறைந்து வரும். மக்களின் நீர்மை விருப்பம் அதிகரித்து பணச்சந்தை நடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.

**iii) மந்தம்,**

வணிகச் சுழற்ச்சியின் மிக மோசமான கட்டம் மந்தம் ஆகும்

மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு கீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும். ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வாங்கும் சக்தி இல்லாததால் கிடங்குகளில் தேக்கமடைய செய்யும். மந்தத்தின் கீழ் நிலை “தொட்டி” என்றழைக்கப்படுகிறது

**iv)மீட்சி .**

இது, மந்தத்திலிருந்து பொருளாதார நடடிவக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும். அரசால் செய்யப்படும் முதலீடுகள் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளினால் ஏற்படும் வருமானம் தேவையை .உயர்த்துகிறது. இதனால் கிடங்குகளில் தேக்கமடைந்த பொருட்கள் காலியாக

| | | |
|---|---|---|
| | துவங்குகிறது. இதனால், உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருவாய், கூலி, லாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன. | |
| 45 ஆ | **பொதுக் கடன்**<br>அரசு பெறும் கடன்களுக்குப் பொதுக் கடன் என்றும் கூறுவர்." **உள்நாட்டு கடன் மற்றும் வெளிநாட்டு கடன்.**<br>***உள்நாட்டு கடன்***<br>**உள்நாட்டு மக்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் கடன் பெறுதல்**<br>***வெளிநாட்டு கடன்.***<br>**வெளிநாடுகள் மற்றும் பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து கடன் பெறுதல்**<br>**முதன்மைப் பற்றாக்குறை**<br>1. இது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்த பின் உள்ள பற்றாக்குறை யாகும்.<br>2. இது அரசின் உண்மையான சுமையை காட்டும்.<br>3. எனவே முதன்மைப் பற்றாக்குறை என்பது வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.<br>4. நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக் குறையைவிட அதிகமாக இருக்கும். | 5 |
| 46அ | **. நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன்**<br>**நோக்கங்களை விளக்கு**<br>**நீடித்த நிலையான வளர்ச்சி.**<br>பொருளாதார வளர்ச்சி, சமூகச் சேர்ப்பு மற்றும் சுற்றுப்புறப் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய குறிக்கோள்களையும் சேர்ந்து சாதிப்பது தான் நீடித்த நிலையான வளர்ச்சியாகும்.<br>**நோக்கங்கள்.**<br>1. வறுமையைஒழித்தல்<br>2. பட்டினியைமுடிவுக்குக்கொண்டுவருதல்;<br>3. நலமான வழ்வை உறுதிப்படுத்துதல்<br>4. தரமான கல்வியை வழங்குதல்<br>5. பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல்<br>6. குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.<br>7. அனைவருக்கும் தரமானவேலை வாய்ப்பினை வழங்குதல்.<br>8. நீடித்த நிலையானபொருளாதார வளர்ச்சியினை வழங்குதல்.<br>9. தேவையான கட்டமைப்புகளை வழங்குதல்,<br>10. தொழில்மயமாக்கல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல். | 5 |
| 46 ஆ | **நுகர்வு சார்பினை தீர்மானிக்கும் புறக் காரணிகளை விவரிக்கவும்.**<br>**புறக் காரணிகள்** | 5 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | **1) வருமான பகிர்வு:-** செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும்.<br>**2) விலை அளவு:-** விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள்.<br>**3) வட்டி விகிதம்**:- அதிக வட்டி விகிதம் சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வை குறைக்கும்.<br>**4) நிதி கொள்கை:-** அரசாங்கம் வரியை குறை க்கும் போ து, செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கும் மற்றும் சமூகத்தில் நுகர் வு விருப்பம் அதிகரிக்கும்.<br>**5) நுகர்வோர் கடன்:-** சுலப தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது இது நுகர்வை அதிகப்படுத்தும். | |
| 47அ | **பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.**<br>பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை.<br>**1. தேசிய வருவாய்** .<br>தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறை களின் பங்கு பற்றி விளக்குகிறது<br>**2. பண வீக்கம்**<br>பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.<br>**3. வாணிபச் சுழற்சி.**<br>பொதுவாக எல்லா நாடுகளும் வாணிப ஏற்றத் தாழ்வு மற்றும் அதன பிரச்சினைகளை சந்திக்கின்றன .<br>**4. வறுமை மற்றும் வேலையின்மை**<br>வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப்<br>பெரிய பிரச்சினையாக உள்ளது.<br>5. **பொருளாதார வளர்ச்சி.**<br>பேரியல் பகுத்தாய்வின்மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்துக் கொள்ளமுடியும்.<br>**6. பொருளாதார கொள்கைகள்.**<br>பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. | 5 |
| 47 ஆ | **திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்**<br>திட்டமிடலுக்கு எதிரான வாதங்களையும் குறைகளையும் கீழே புரிந்து<br>கொள்வோம்<br>**1. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை**:- . திட்டமிட்ட பொருளாதாத்தில் சிக்கலான முடிவுகளை மத்திய திட்டக் குழு எடுக்கிறது. இது நுகர்வோர்,<br>உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களை கட்டுப்படுத்துகிறது.<br>**2. தன்முனைப்புக்குறைதல்:-** மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல் மற்றும் புதுமைகளை புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது. | 5 |



www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | **3. அதிகமான நிர்வாக செலவு:-** திட்டமிடலின் நோக்கம் தொழில்மயமாக்கல், சமூக நீதி, நாட்டு நிலைமையை சமப்படுத்துதல் போன்றவை அதற்கு நாடு செலவிடும் தொகை அடையவுள்ள பலனை விட அதிகமாக இருக்கும்<br>**4. முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள்:-** திட்டமிடல் நாடுகளில் நுகர்வு மற்றும் உற்பத்தி அளவினை நிர்ணயிப்பது கடினம் | |

www.Padasalai.Net